# 16-11-2024 செய்தி

## உகந்த வயதினருக்கு திரைப்படங்களைப் பரிந்துரைக்க யூஏ7+, யூஏ13+, யூஏ16+ பிரிவுகள் அறிமுகம்

- மத்திய திரைப்பட தணிக்கை வாரியம் இதுவரை திரைப்படங்களை "யூ" "ஏ" மற்றும் "யூஏ" ஆகிய பிரிவுகளில் திரையிடுவதற்கான அனுமதி வழங்கி வந்தது.
- இதில் "யூ" வகை திரைப்படங்கள் எல்லா வயதினருக்கும் உகந்தவையாகும்.
- "ஏ"வகையில் அனுமதிக்கப்படும் படங்கள் 18 வயது கடந்தவர்கள் மட்டுமே காண்பதற்கு அனுமதிக்கப்பட்டவை. அதற்குத் குறைவான வயதுடையவர்கள் காண அனுமதி இல்லை.
- திரைப்படங்களில் குழந்தைகளுக்கு ஒவ்வாத வன்முறை/பயமுறுத்தும் காட்சி அமைப்புகள் நெருக்கமான அல்லது கிளர்ச்சியூட்டும் காட்சிகள் அடிமைப்படுத்தும் பழக்கங்கள் விபரீதமான நடத்தைகள் போன்ற அம்சங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் விதம், அவை பார்வையாளர் மேல் உண்டாக்கும் தாக்கம் போன்றவற்றை கருத்தில் கொண்டு அவை 7, 13, 16 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு உகந்ததாக "யூஏ7+", " யூஏ13+", " யூ ஏ 16+" என வகைப்படுத்தப்படும்.
- "யூஏ7+", " யூஏ13+", " யூ ஏ 16+" என்று பரிந்துரைக்கப்படும் திரைப்படங்களில், தங்கள் குழந்தைகளின் தனித்தன்மையை கருத்தில் கொண்டு குறிப்பிட்ட வயதிற்கும் குறைவான வயதுடைய குழந்தைகள் அந்த திரைப்படத்தை பார்க்க அனுமதிப்பதா வேண்டாமா என்பதை முடிவு செய்யும்.

## அமெரிக்கா, பிரிட்டன், கனடா உள்ளிட்ட ஓஇசிடி நாடுகளுக்கு 2022-ல் 5.6 லட்சம் இந்தியர்கள் புலம் பெயர்வு

- 2022-ம் ஆண்டில் ஓஇசிடி நாடுகள் என்று கூறப்படும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு நாடுகளுக்கு 5.6 லட்சம், இந்தியர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.
- அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற ஓஇசிடி நாடுகளுக்கு இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த மக்கள் குடிபெயர்ந்து விடுகின்றனர்.
- உயர் படிப்பு, வேலை, திருமணம் முடித்தல் போன்ற பல்வேறு காரணங்களுக்காக அந்த நாடுகளுக்கு மக்கள் குடிபெயர்கின்றனர்.
- அந்த வகையில் 2022-ஆண்டில் இந்தியாவைச் சேர்ந்த 5.6 லட்சம் பேர், ஓஇசிடி நாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளனர். இந்த ஓஇசிடி நாடுகளுக்கு குடிபெயரும் நாடுகள் வரிசையில் இந்தியர்கள்தான் முதலிடத்தில் உள்ளனர்.
- 2021-ம் ஆண்டைக் காட்டிலும் 2022-ம் ஆண்டில் 35 சதவீதம் கூடுதலாக இந்தியர்கள் ஓஇசிடி நாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ள தகவல் கிடைத்துள்ளது.

**2ம் இடத்தில் சீனர்கள்**

- இந்தியர்களுக்கு அடுத்தப்படியாக ஓஇசிடி நாடுகளுக்கு சீனர்கள் அதிக அளவாக குடிபெயர்ந்துள்ளனர். 2022-ல் 3.2 லட்சம் சீனர்கள் ஓஇசிடி நாடுகளில் குடியேறியுள்ளனர்.
- சீனாவுக்கு அடுத்த இடத்தில் 2.6 லட்சம் நபர்களுடன் ரஷ்யா உள்ளது என்று தி இன்டர்நேஷனல் மைக்ரேஷன் அவுட்லுக் அமைப்பு அறிக்கையை பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் வெளியிட்டுள்ளது.
- 2022-ல் வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்த 5.6 லட்சம் இந்தியர்களில் 1.12 லட்சம் பேர் பிரிட்டனுக்குச் சென்றுள்ளனர். அமெரிக்காவுக்கு 1.25 லட்சம் பேரும், கனடாவுக்கு 1.18 லட்சம் பேரும் இடம்பெயர்ந்துள்ளனர்.
- அதேநேரத்தில் ரஷ்யா, ரொமேனியா நாடுகளில் இருந்து தலா 2.7 லட்சம் மக்கள் ஓஇசிடி நாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளனர்.
- ரஷ்யாவிலிருந்து துருக்கி, எஇஸ்ரேல், ஜெர்மனி நாடுகளுக்கு அதிக மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

SURESH'